ஶ்ரீ ஹரி:

மே 2017 வேணு 22 கானம் 10

# மதுரமுரளி

மஹாரண்யம் ஶ்ரீ ஶ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள்
அருளாசியுடன் வெளிவரும்
தெய்வீக மாதப் பத்திரிகை

தனி பிரதி
Rs 15/-
ஆண்டு சந்தா
Rs 180/-



Delivered by India Post



www.indiapost.gov.in

ப்ரேமிக ஜன்மஸ்தான், சேங்கனூர், 2 April 2017



<u>முன் அட்டை:</u>
மேல்கோட்டை ஸ்ரீ சம்பத் குமாரர்
<u>பின் அட்டை:</u>
ஸ்ரீ வானரராஜசிம்மன் கோவில், காங்கேயம்,
11 April 2017





# பொருளடக்கம்

மதுரமான மஹனீயர்-254..........5

கேள்வி பதில்....................................10

நாம் யார்?...........................................................11

ப்ரேமிகவரதனின் ஆபரணங்கள்....................................14

பக்தி சுகந்தம் - 2................................................16

பாலகர்களுக்கு ஒரு கதை..............................................31

மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை....................................33

உள்முக மாற்றமும் வளர்ச்சியும்....................................35


பாரம்பரிய பொக்கிஷங்கள்.................................37

சைதன்ய மஹாப்ரபு...............................39

படித்ததில் பிடித்தது.................41

**ஹரே ராம ஹரே ராம**
**ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண**
**க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

NO FAME
NO SELF INTEREST
NO NAME
ONLY GOD



# மதுரகீதம்

## பாஷ்யகாரம் பஜே பாஷ்யகாரம்

**ராகம்: மத்யமாவதி**

**தாளம்: ஆதி**

**பல்லவி**

பாஷ்யகாரம் பஜே பாஷ்யகாரம் (பாஷ்யகாரம்)

**சரணங்கள்**

பவ்ய குணாலயம் பாஷ்யகாரம்
பாவுக வத்ஸலம் பாஷ்யகாரம்

ஊர்த்வ புண்ட்ராங்கிதம் பாஷ்யகாரம்
உத்தம ஸ்லோகம் பாஷ்யகாரம்

காஷாய தாரிணம் பாஷ்யகாரம்
கருணா ஸாகரம் பாஷ்யகாரம்

த்ரிதண்ட ஷோபிகரம் பாஷ்யகாரம்
தீன வத்ஸலம் பாஷ்யகாரம்

ரங்கராஜ பூஜிதம் பாஷ்யகாரம்
யதிராஜ ராஜம் பாஷ்யகாரம்

கோதா ஸஹோதரம் பாஷ்யகாரம்
கோவிந்த பூஜிதம் பாஷ்யகாரம்

ப்ரபத்தி மார்க ப்ரகாசகம் பாஷ்யகாரம்
ப்ரபன்ன முரளீதர ஸேவிதம் பாஷ்யகாரம்

# மதுரமான மஹனீயர்

“ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் பகவான்தான் தீர்மானிக்கின்றான். எந்த ஒரு ஜீவனும் ஸ்வதந்திரமானவன் இல்லை. இது தான் உண்மை. இருந்தபோதிலும், பலருக்கு இதில் சந்தேகம் வரும். ஆனால், என் வாழ்க்கையில் இது சந்தேகமில்லாத உண்மை. ஒரு நாள்கூட, ஏன் கனவில்கூட, நான் இப்பொழுது இருக்கும் ஒரு வாழ்க்கையைப்போல் எனக்கு அமையும் என்று நினைத்ததும் கிடையாது. ஆசைப்பட்டதும் கிடையாது.

படிப்பைத் தொடருவதற்காக சென்னை வந்தேன். அதுவரையில், எல்லோரும் எந்த அளவில் பக்தியுடன் இருப்பார்களோ அதுபோல்தான் இருந்தேன். மஹாபெரியவாளை தரிசனம் செய்ய ஆரம்பித்த பிறகு ஒரு மாற்றம் ஏற்பட்டது.



மஹாபெரியவாளை தரிசனம் செய்ய செய்ய வாழ்க்கை சிறிது சிறிதாக மாறியது. எண்ணங்கள் மாறின. லட்சியம் மாறியது. செயல்கள் மாறின. சிறிது சிறிதாக உலக வாழ்க்கையிலிருந்து விலகி தனியாக வந்துவிட்டேன். அப்பொழுது என்னிடம் எந்த உடமையும் கிடையாது. சில நாட்கள் சாப்பிடுவேன். சில நாட்கள் சாப்பிடாமல் இருப்பேன். மனது ஆழ்ந்த தியான நிலையில் இருந்தது. நான் வேதமோ, சாஸ்திரங்களோ, ஸம்ஸ்க்ருதமோ, இதிஹாசமோ, புராணங்களோ எதையும் கற்றுக் கொண்டதும் இல்லை. என்னுடைய குடும்பமும் இத்தகைய சூழ்நிலை உடையது அன்று.

காஞ்சி, திருவண்ணாமலை, ராமேஸ்வரம், நெரூர், ஸ்ரீரங்கம், திருவானைக்காவல், வடவாம்பலம், பண்டரீபுரம், பிருந்தாவனம், காசி, ஹரித்வார், ரிஷிகேஷ் என்று சுற்றி வர ஆரம்பித்தேன். நான் முழுவதுமாக உலகத்திலிருந்து ஒதுங்க ஆரம்பித்தாலும் ஏதோ ஒன்று என்னை உலகத்தை நோக்கி தள்ளுவதை என் உள் உணர்வினால் நன்றாக உணர முடிந்தது. என்னைச் சுற்றி எப்பொழுதும் யாராவது இருக்க ஆரம்பித்தார்கள். அப்பொழுது எனக்கு எந்த கவலையும் பயமும் இருக்காது. மயானத்திலும் போய் இரவு முழுவதும் தனியாக அமர்ந்திருப்பேன்.

என்னைச் சுற்றி கூட்டம் சிறிது சிறிதாக வளர ஆரம்பித்தது. பக்தர்கள் வந்தார்கள். எனக்கு யாருடனும் பழகவும் தெரியாது. பேசவும் தெரியாது. கூச்ச ஸ்வபாவத்தினால் எப்பொழுதும் ஒதுங்கியே இருக்க ஆசைப்படுவேன். எனக்கு தனியாக இருப்பதுதான் மிகவும் பிடிக்கும். ஆனால், என்னுடைய வாழ்க்கை வேறுவிதமாக மாறிக்கொண்டே வந்தது. இறைவன், மாற்றி அமைக்க விரும்பினான்போலும். பலவிதமான பக்தர்கள்.

சிலர், emotional imbalance நிலைகளில் இருப்பார்கள். முதலில், அவர்களை புரிந்துகொள்ளவும் முடியவில்லை. அவர்களுக்கு எப்படி guide செய்ய வேண்டும் என்றும் தெரியவில்லை. இப்படி சொல்லிக்கொண்டே போகலாம்.

வெளியில் என்னை பேசுவதற்கு அழைத்தார்கள். தயக்கத்துடன் ஆரம்பித்தேன். இன்று, இந்தியாவில் நான் பேசாத ஊர்களே கிடையாது. அன்று நாம் வேதபாடசாலையை ஆரம்பித்த காலகட்டத்தில் வேதபாடசாலைக்கு மாணவர்கள் வருவதே கடினம். இன்று, வேத பாடசாலைகள் நன்றாக நடக்கின்றன. தொலைக்காட்சியில் முதன்முதலில் பேச ஆரம்பித்தேன். அது பல வருடங்கள் தொடர்ந்து வந்தது. இன்று ஆன்மீக நிகழ்ச்சிகள் இல்லாத தொலைக்காட்சிகளே கிடையாது.

வெகுநாட்களுக்குப் பிறகு, கல் வைத்த வாரம், ப்ரஸ்தானத்ரய பாஷ்ய பாராயண ஸதஸ் எல்லாம் மீண்டும் ஆரம்பித்து நடத்தப்பட்டது. இன்று பல இடங்களில் நடக்கின்றது. அரிமேயவிண்ணகரம் ஆரம்பித்து இன்று எவ்வளவோ கோவில்களில் திருப்பணி.

ப்ரேமிகஸ்ரீநிவாஸன் முதலில் வந்தார். அவரைத் தொடர்ந்து ப்ரேமிகவரதன் வந்தார். சற்றேரகுறைய இருபத்து ஐந்து வருடங்களாக எத்துனை பஜனை, எத்துனை கதை, எத்துனை பூஜை, எத்துனை மஹான்களுடைய தர்சனம், எத்துனை க்ஷேத்ரங்கள், எத்துனை தீர்த்தங்கள்...அப்பப்பா! இப்படியாக பகவான் வாழ்க்கையை அமைத்து கொடுத்துவிட்டான். இப்படி வாழ்ந்த வாழ்க்கையை பற்றி ஒரு ஆத்ம திருப்தி உள்ளது.

மலையானது தூரத்திலிருந்து பார்ப்பதற்கு பசுமையாகவும் அழகாகவும் இருக்கும். அந்த மலையிலேயே சென்று இருக்க மாட்டோமா என்று மனது ஏங்கும். மலையை நெருங்க நெருங்கதான் அதில் உள்ள முட்கள், பூச்சிகள், தேள், பாம்புகள் என்று நடக்கும் ஒவ்வொரு அடியிலும் அதன் கடினம் தெரியும். அதுபோல்தான் இந்த வாழ்க்கையும். வெளியிலிருந்து பார்ப்பதற்கு அழகாக இருக்கும். மற்றொரு பக்கம் அதில் படும் வேதனைகள், பிரச்சனைகள், மனவருத்தங்கள் சொல்லி மாளாது. சில சமயங்களில், எங்காவது ஓடிபோய்விடலாமா என்று தோன்றும். எங்கு போவது. சில சமயங்களில், சீதாபிராட்டி நினைத்தது போன்று நினைத்ததும் உண்டு. அணில்தான் மிகவும் மிருதுவான ஒரு ஜீவன். ஆனால், அதையும் வேடன் விட்டுவைப்பதில்லையே!

இப்படியாக வந்து, வந்து இரண்டு விஷயங்களில் என்னுடைய முழு கவனத்தை இப்பொழுது செலுத்த ஆசைப்படுகின்றேன். ஒன்று, பழைய கோவில்கள் திருப்பணி. மற்றொன்று அவனுடைய நாமம். இன்று ஸங்கம் விரிந்து பரந்துள்ளது. அங்கு அங்கு நாமத்வார் ஏற்படுத்தப்பட்டு மக்கள் கூடி கூடி ஆனந்தமாக நாமம் சொல்லி வருகின்றனர்.

இந்த நாமகீர்த்தனம் எளிமையானது. குழப்பமில்லாதது. போலித்தனம் இல்லாதது. ஏமாற்றம் இல்லாதது. பெரியோர்கள் காட்டிய இந்த பாதையை எல்லோருக்கும் காண்பிப்பதற்கு இறைவன் என்னை கருவியாக பயன்படுத்திக் கொண்டான். இந்த விஷயத்தில் எனக்கு முழுதிருப்தி உள்ளது.

என்னிடம்கூட நிறைய குற்றம் குறைகள் இருக்கலாம். ஆனால், என் ஸங்கத்து அன்பர்கள் எல்லோரும்

நல்லவர்கள். என்னை தெய்வமாக கொண்டாடுகிறார்கள். என்னைத் தவிரவும், நான் காட்டிய வழியை தவிரவும் வேறொன்றை நோக்கி திரும்ப கூடமாட்டார்கள். அவர்கள் என்னைப் பார்த்து இதுவரை எந்த கேள்வியும் கேட்டதும் கிடையாது. எனக்கு அப்படி ஒரு அருமையான சங்கத்தை பகவான் ஏற்படுத்தி கொடுத்துள்ளான். நான், உலகத்தில் ஏதாவது செய்திருந்தேனானால் அதற்கு ஒரே காரணம் நம்முடைய ஸத்ஸங்கத்து அன்பர்களின் கடினமான உழைப்புடன் கூடிய சோம்பேறித்தனம் இல்லாத சாதுஸேவைதான். அதுபோல், இவ்வளவு செயல்கள் நடந்ததற்கும், நடந்து கொண்டிருப்பதற்கும் ஒரே காரணம் நம் ஸத்ஸங்கத்து அன்பர்களின் தாராளமான பொருளுதவிதான். இவர்களில் யாரும் பெரிய தனவந்தர்கள் கிடையாது. நான் கஷ்டப்பட்டுவிடகூடாதே என்பதற்காக தானே முன்வந்து பொருளுதவி செய்கின்றார்கள். அயராது உழைக்கின்றார்கள்.

இப்பொழுது எனக்கு சற்று ஓய்வு தேவைப்படுகின்றது. ஓய்வே இல்லாமல் செயல்படும்பொழுது அடிக்கடி உடம்பிற்கு ஏதாவது வருகின்றது. ஒவ்வொரு ஊருக்கும் சத்சங்க நிகழ்ச்சிக்கு வந்துவிட்டு, எனக்கு முடியவில்லை, அசக்தமாக உள்ளது என்று சொல்வதற்கும் எனக்கு விருப்பம் இல்லை. நான் சிறிது காலம் ஒரே இடத்தில் அமர்ந்து நாமம் சொல்லி வர ஆசைப்படுகின்றேன். பிறகு, இறைவன் திருவுளம்போல் நடக்கட்டும்"

- ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

இவ்வாறு ஸமீபத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் வெளிப்படுத்திய அவர் மனதில் எழுந்த எண்ண ஓட்டங்களை உங்களோடு பகிர்ந்துகொண்டேன்.

Dr ஆ பாக்யநாதன்ஜி

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள்

**தெய்வமோ சைதன்யமயமானது என்று சொல்கிறீர்கள்! நான் பார்க்கும் ஒரு காகிதமும், கற்சிலையும் எப்படி தெய்வமாகும்?**

சரி! அது தெய்வம் இல்லை என்றே வைத்துக் கொள்வோமே. நீங்கள் சைதன்யம் உடையவர்தானே! காகிதத்திலோ அல்லது அர்ச்சையிலோ (கல், மரம் அல்லது உலோகத்தாலான) அந்த தெய்வத்தைப் பார்த்தவுடன், அதைப் பற்றிய சிந்தனை உங்கள் மனதில் தோன்றுகிறதே! அதற்கு 'பாவம்' (bhaavam) என்று பெயர். அந்த தெய்வீகமான உணர்வு தான் தெய்வம். யுக்தியால் சொன்ன இந்த விஷயத்தை சாஸ்திரங்களும் ஆமோதிக்கின்றன. 'பாவத்தில்' தான் தெய்வம் உள்ளது என்று விஷ்ணு புராணம் சொல்கின்றது. மேலும், அந்த தெய்வீக உணர்வே நீங்கள் பார்க்கும் பொருட்களில் (காகித படமோ, கற்சிலையோ) பிரதிபலிப்பதால் அவைகளும் தெய்வம்தான். ஆகவே, அதற்கு தெய்வத்திற்கு கொடுக்கும் மதிப்பும் ப்ரேமையும் அளிக்கிறோம். அர்ச்சாவதாரமாக அந்த தெய்வத்தைக் கொண்டாடுகிறோம்.

**மகான்களுக்கு கோபமே வராது என்கின்றீர்களே! சில சமயம் தங்களுக்கு கோபம் வருகின்றதே!**


அது கோபமே இல்லை!

**அது கோபம் இல்லை என்று எப்படி ஏற்றுக்கொள்வது?**

உங்களுக்கு பக்தி இல்லாதபொழுதே உங்களை பக்தர் என்று பலர் நினைகின்றார்களே! அதுபோலத் தான் இதுவும்!!

**இந்த உலகம் என்னைப் பொறுத்தவரை இயற்கையாக உருவானது. நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்?**

கடவுள் உலகத்தைப் படைத்தார். கடவுளை யார் படைத்தார்? ஜடமான உலகமே இயற்கையாக உருவாகும் என்றால், சைதன்யமான கடவுள் ஏன் இயற்கையாக உருவாகமாட்டார்? அவர் இயற்கையாக உருவானவர்.



# நாம் யார்?

எல்லோருக்கும் இருக்கக்கூடிய சந்தேகங்களில் ஒரு முக்கியமான சந்தேகம் நான் நல்லவனா? கெட்டவனா? என்பதே. நம்மைப்பற்றி நமக்கே சரியாக புரிவதில்லை. நம்மைப்பற்றி சரியாக எப்படி புரிந்து கொள்வது? நம்மைப் பற்றி நாமே அறியமுடியுமா? மற்றொருவர் மூலமாகத்தான் அறிய முடியுமா? நம் கண்ணை நாமே நம் கண்ணால் பார்க்க முடியுமா? நாம் யார்?

மனிதர்கள் என்பவர்கள் உணர்வு (உணர்ச்சி) பூர்வமானவர்கள். ஐம்புலங்களால் தான் நாம் இந்த உலகத்துடன் நம்மை இணைத்துக் கொள்கிறோம். ஐம்புலன்களால் ஐந்து பூதங்களோடு நம்மை இணைத்துக் கொள்ளாவிட்டால் நம்மைப் பொறுத்த வரையில் உலகமே கிடையாது என்பது தான் உண்மை!

ஐம்புலன்களில் ஒரு புலன் கூட இந்த உலகத்திடம் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள போதுமானதாகும். அப்படித் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளும்போது, நமக்கு மகிழ்ச்சி, துக்கம், அறுவெறுப்பு, பயம், ஏக்கம், பொறாமை, கோபம், ஆசை, அன்பு, பாசம், காமம், ஆணவம், வெறுப்பு, உதாசீனம் போன்ற பல உணர்வுகள் (உணர்ச்சிகள்) ஏற்படுகின்றன.

நாம் கண்களால்தான் உலகைப் பார்க்கின்றோம். உலகை பார்க்கும் அந்த கண்களைப் பார்க்கவேண்டும் என்றாலும் கண்களால் தானே பார்க்க வேண்டும்! நமது கண்களை நமது கண்களாலேயே எப்படி பார்ப்பது? இது முடியக்கூடிய காரியமா?

முடியும்! எப்படி என்றால், ஒரு கண்ணாடியைக் கொண்டுதான்!! நமது கண்களின் பிரதிபிம்பத்தை நமது கண்களாலேயே கண்ணாடியில் பார்க்க முடியும் அல்லவா? பிரதிபிம்பத்தில் காணும் கண்களே நம் கண்களல்லவா? உலகமே, நம்மைப் பற்றி நாம் தெரிந்து கொள்வதற்கான கண்ணாடி. முன்பு கூறியது போல, உலகத்தினுடனானத் தொடர்பு, நம்முள் உணர்ச்சிகளின் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. குறிப்பாக, மகிழ்ச்சி என்னும் உணர்ச்சியே நமது பிரதிபிம்பம். அதைத் தெரிந்து கொண்டாலே நம்மை நாமே தெரிந்து கொண்டதாகும்.

எந்தெந்தப் பொருளை, அல்லது சம்பவத்தை அல்லது அத்தகைய மனிதர்களை அல்லது அதனுடன் தொடர்புடைய ஜீவராசிகளை நினைத்தால் நமக்கு மகிழ்ச்சி உண்டாகின்றதோ அதுதான் நாம் யார்? என்பதை நமக்குக் காட்டிக்கொடுக்கின்றது! ஆகவே, அதுவேதான் நாம்!!

பாகவதர்களைப் பார்த்தும், அவர்களைப் பற்றி கேட்டும், அவர்களை நினைத்தும் மகிழ்ச்சி அடைந்தால் நாம் பாகவதர்! ஆனால், பஜனை செய்து கொண்டே பணம் படைத்தவன், அதிகாரி, ஆடம்பரம் போன்றவற்றில்/போன்றவர்களிடம் நமக்கு மகிழ்ச்சி ஏற்படுமாகில் நாம் பணத்தாசை உள்ளவர் என்று அறியவேண்டும்!

நாம் வெளிநாட்டில் ஒரு அலுவலகத்தில் வேலை செய்து வந்தாலும் பட்டம், பதவி, புகழ் என்ற ஆசைகள் இல்லாமல், 'எப்பொழுது பஜனை செய்வோம்', 'எங்கு சத்சங்கம் நடக்கிறது', 'திவ்யநாமத்தில் எப்பொழுது ஆனந்தமாய் ஆடிப் பாடுவோம்', 'குருநாதரை எப்பொழுது தரிசனம் செய்வோம்' என்ற எண்ணங்களும் ஆசைகளுமே நம்முள் நிறைந்திருந்தால், நாம் பாகவதர் தாம்!! நாம் என்ன செய்கிறோம் என்பது முக்கியமன்று. ஏனென்றால் விதி நம்மை சமயத்தில் நமக்குப் பிடிக்காத, சம்பந்தமே இல்லாத விஷயத்தில்கூட தள்ளிவிடும்! ஆகவே, நாம் என்ன செய்கிறோம் என்பதை வைத்து நம்மை மதிப்பிட முடியாது.

பூஜை, ஜபம், தீர்த்தயாத்திரை, திவ்யதேசம், மகான்களின் கீர்த்தனம், பாராயணம், குருநாதர் - இவர்களை/இவைகளை நினைத்தாலே நமக்கு மகிழ்ச்சி ஏற்பட வேண்டும். அப்போதுதான் நாம் பக்தர். இவைகளை எப்போதும் செய்து கொண்டிருந்தாலும்கூட, இவைகளைப் பார்த்து மகிழ்ச்சி வரவில்லை என்றால், இவைகளை 'கடனே!' அல்லது 'விதியே!' என்று செய்து கொண்டிருக்கின்றோம் என்று பொருள். செய்யும் செயல்கள் பக்தி சாதனங்களாக இருப்பினும், அதில் மகழ்ச்சி வரவில்லையெனின் நாம் பக்தர் இல்லைதானே!

மற்றொரு பக்தரைப் பார்க்க வேண்டும் என்ற விருப்பும், பக்தியை புண்ணியத்திற்கு அல்லது பெயர்/புகழுக்கு என்ற பேச்சை கேட்டாலே நமக்கு வெறுப்பு ஆகியன ஏற்பட்டால், நாம் பக்தர்தாம்!

நமது அன்றாட வாழ்வில் விருப்பு, வெறுப்பு ஏற்படுவது சகஜமே. ஆனால், எதைப்பார்த்தாலும் வெறுப்பு வருவது மிகவும் ஆபத்தான நிலை.

குருநாதர் தரிசனத்தாலோ, சத்சங்கத்தினாலோ சுகமும், அது இல்லாது போகும் போது துக்கம் ஏற்பட்டால் நாம் பக்தர்தாம்!

நமது அன்றாட வாழ்வில் சுகம், துக்கம் மாறி மாறி வருவதும் சகஜமே. எனினும், எதைப்பார்த்தாலும் அதனால் பாதிக்கப்படாமல் எப்பொழுதும் சோகத்துடன் எந்த முயற்சியும் இல்லாமல் இருப்பது மன இறுக்கம் (depression) ஆகும்.

உலகில் எதைப் பார்த்தாலும், எந்த சம்பவம் ஏற்பட்டாலும், ஆழ்ந்த மன இறுக்கத்தில் இருப்பவர்கள் எப்போதும் துக்கமாகவே இருப்பதை (sad for no reason) காணும் போதே, இதன் நேர் எதிர்மறையும் இருக்க வாய்ப்பு இருப்பது யுக்திக்குப் பொருத்தம் தானே (happy for no reason)! அந்த நிலை தான் ஞான நிலை! எதைப்பார்த்தாலும் ஆனந்தமாகி, தானே ஆனந்த நிலையில் இருப்பது ஞானியின் நிலையாகும்! இதையே ஸ்ரீமத் பாகவதமும், 'गृहीत्वापीन्द्रियैरर्थान्यो न द्वेष्टि न हृष्यति' என்று குறிப்பிடுகிறது. இதுவே ஞானியின் ஆனந்த நிலை!

உடலில் உயிர் இருப்பதால் மட்டுமே ஒரு மனிதனோ அல்லது மற்ற உயிரினங்களோ அவர்களது வாழ்க்கையை வாழ்ந்துவிட முடிவதில்லை. அந்த உயிர்த் தன்மையிலிருந்து 'நான்', 'எனது' என்ற எண்ணம் வந்து கொண்டேயிருக்கிறது. அந்த உணர்வுதான் அவனை இந்த உலகத்தோடு தொடர்பில் வைத்து மகிழ்ச்சி, துக்கம், பொறாமை, மற்றவரோடு தன்னை ஒப்பிட்டுப் பார்த்தல், வலி, பேராசை, வெறுப்பு, சந்தோஷம் இன்னும் பல உணர்ச்சிகளுக்கும் காரணமாகிறது. உயிர் மட்டும் இருந்து 'நான்', 'எனது' என்னும் உணர்வற்ற ஒருவனால் இன்ப துன்பங்களை அனுபவிக்க இயலாது. அது மருத்துவ உலகில் "கோமா" என்று சொல்லும் நிலைக்கு ஒப்பானது. இந்த 'நான்', 'எனது' என்ற உணர்வைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக, இந்த உணர்வை உடலோடு நிறுத்திக்கொள்ளாமல், பிரபஞ்சம் முழுவதும் வியாபித்திருப்பதாக உணர்வதற்குப் பழக்கினால் அதுவே பேரானந்தமாகப் பெரியோர்களால் அறியப்படுகிறது. எல்லையற்ற ஆனந்தம் எனப்படுவதும் அதுவே!

~ ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி

# ப்ரேமிகவரதனின் ஆபரணங்கள்

ஸ்ரீ ராமானுஜம்ஜி

ஒரு நாள், ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு தினமும் அணிவிக்கும் ஒரு சிறிய நகையைக் காணவில்லை என்று, பூஜை செய்யும் காமாசாஸ்த்ரி ஸ்ரீ ஸ்வாமிஜிக்குத் தொலைப் பேசியில் தெரிவித்தார். அப்பொழுது அதை மனதிற்கு எடுத்துக் கொண்டால் வேறு வேலை ஓடாது என்று நினைத்து, ஸ்ரீ ஸ்வாமிஜி அதில் கவனம் செலுத்தவில்லை.

பத்து நாட்கள் கழித்து ஆஸ்ரமம் சென்றார் ஸ்ரீ ஸ்வாமிஜி. ப்ரேமிகவரதனைப் பார்த்ததும் அவருக்கு அழுகையே வந்துவிட்டது. உன்னுடைய ஒரு ஆபரணத்தைக் காணவில்லை. ஆனால், நான் இப்படி அலட்சியமாக இருக்கிறேனே! இது சரியா? உலகில் உள்ள மனிதர்கள் எல்லோரும் தங்களுடைய நகையைக் காணவில்லை என்றால் எப்படி அழுது ஆர்பாட்டம் செய்கிறார்கள்? பகவானான உனது ஆபரணத்தைக் காணவில்லை என்றால் நான் இப்படி இருப்பது நியாயமா? உன்னுடைய பொருள் என்பதால் எனக்கு அலட்சியமா? சேங்கனூர், நாங்கூர், கோவிந்தபுரம், டெல்லி, பிருந்தாவனம், பெங்களூரு, வேதாரண்யம், ஸ்ரீரங்கம்,

ஹைதராபாத் மற்றும் எவ்வளவோ ஊர்களில் நாமத்வார்கள் ஏற்படுத்தி வருகின்றேன். இப்பொழுதே இப்படி நடக்கிறது என்றால், பிற்காலங்களில் என்ன ஆகும்? அல்லது, யாரோ ஒருவர் அவர் பணத்தில் வாங்கிக் கொடுத்தார் என்பதால் எனக்கு இந்த அலட்சியமா? என்று பலவாறு சிந்தித்துப் புலம்பிக்கொண்டே இருந்தார். ப்ரேமிகவரதனைப் பார்த்து அழுதுகொண்டே இருந்தார். அன்று இரவு தூக்கமே வரவில்லை.

மறுநாள் காலை ஆசிரமத்தில் கைங்கர்யம் செய்துவரும் ஸ்ரீதாமாவை அழைத்து, ‘‘எதற்கும் நீ சென்று ப்ரேமிகவரதனின் நிர்மால்ய புஷ்பங்களைக் கொட்டுகிறோமே, அங்கு ஒரு முறை தேடிப் பார்’’ என்றார். ஸ்ரீதாமாவும் தினமும் நிர்மால்ய புஷ்பங்களைக் கொட்டும் இடத்தில் தேடச் சென்றார். என்ன ஆச்சர்யம்! அந்த இடத்தில் அந்த ஆபரணம் அப்படியே இருந்தது. பலர் நடமாடக் கூடிய வீதி. யார் கண்களிலாவது பட்டு அவர்கள் அதை எடுத்துச் சென்றிருக்கலாம். ஆனால், அங்கேயே இருந்தது. ஸ்ரீதாமா அதை எடுத்து வந்து ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் கொடுத்த உடன் ஸ்ரீ ஸ்வாமிஜி அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. ப்ரேமிகவரதன் ‘தான்’பட்ட தாபத்தைக் கண்டு பொறுக்காமல் செய்த லீலையை நினைத்து உருகிவிட்டார். ப்ரேமிகவரதனிடம் சென்று, ‘‘இவைகள் எல்லாம் உன் உடைமைகள், உன் சொத்து, இவைகளைப் பார்த்துக் கொள்ள வேண்டியது உன் பொறுப்பு’’ என்று சொல்லி வந்தனம் செய்தார் ஸ்ரீ ஸ்வாமிஜி.



# பக்தி சுகந்தம்

**ஸ்ரீ ராமானுஜம்ஜி**

...சரி! அப்படியே பக்தி விஷயத்துக்கு வருவோம்.

பக்தி செய்வதனால் ஏதாவது பயனை எதிர்பார்த்தோமானால், அது நிச்சயம் கூலிக்காக வேலை செய்வது போன்றதுதான். அதிகம் நாம் அதை விருப்பப்பட்டு செய்ய மாட்டோம். அலுப்புத்தட்டும்; எப்பொழுதும் புலம்புவோம். ஏனெனில், அது கடமையாக இருக்கிறது.

ஆனால், இசையையோ, கிரிக்கெட்; கால்பந்து போன்ற விளையாட்டுக்களையோ அல்லது சினிமாவோ பார்த்து கொண்டிருக்கையில், ஏன் இவ்வளவு நேரம் ஆகிறது என கேட்கிறோமா என்ன? அல்லது யாரும் என்னுடன் வந்து இதை பகிர்ந்து கொள்ளவில்லையே எனக் குறைப்பட்டு கொள்கிறோமா என்ன? அல்லது விளையாட்டைப் பார்ப்பதனால், இசையைக் கேட்பதனால், சினிமா பார்ப்பதனால் எனக்கு என்ன பலன் எனக் கேட்டுக் கொள்கிறோமா? அல்லது நினைக்கத்தான் செய்கிறோமா? இல்லையே! இதெல்லாம் செய்வதால் வேலையில் பதவி உயர்வு அல்லது ஏதாவது சலுகை என்று ஏதாவது இருக்கிறதா? ஊக்கம் யாரும் கொடுக்கவில்லை எனச் சொல்கிறோமா? இல்லையே! இதெல்லாம் செய்வதற்கு ஊக்கம் தேவையாக இருக்கிறதா? அதாவது ஏதாவது Motivation (உந்துதல்) அவசியமாக இருக்கிறதா என்ன? இல்லையே!

ஆக, மஹாமந்திரம் சொல்ல மட்டும் Motivation (உந்துதல்) வேண்டும் என்றால், மற்றவற்றிற்கெல்லாம் என்ன Motivation இருக்கிறது? நாமாகச் செய்கின்றோமே!

ஒரு எதிர்பார்ப்புடன், அது வெகுமதியோ, பதவியோ, மரியாதையோ அல்லது பாராட்டோ இப்படி எதற்காக செய்தாலும் அது அவ்வளவு சுவையாக இருக்காது. அது சுகமாகவும் இருக்காது.

பக்தி செய்ய ஆரம்பிக்கும் முன்னரே, பக்தி செய்தால் என்ன பலன் எனக் கேட்கிறோம். உண்மைதானே? முதன் முதலில் இப்பொழுதுதான் வேலையில் சேர நேர்காணலுக்குப் போகிறவன், எனக்கு என்ன சம்பளம் தருவீர்கள்? ஐந்து வருடம் கழித்து எனக்கு என்ன உயர் நிலை வரும் என்றெல்லாம் கேட்பானா என்ன? ஆதலால், பக்தி செய்கையில் இதனால் என்ன கிடைக்கும் என எதிர்பார்த்துச் செய்யக் கூடாது. மேலும், நான் பக்தி செய்கிறேனாக்கும்; நான் இந்த பெரிய மார்க்கத்தைப் பின்பற்றுகிறவன் தெரியுமா, என்பது போன்ற பெருமிதமும் கூடாது.

பெரிய விளையாட்டுப் பந்தயங்களில் ஆடுபவர்களுக்கும், விளையாட்டை ஏற்பாடு செய்பவர்களுக்கும் நிறையப் பணம் கிடைக்கிறதுதான். ஆனால், ரசிகர்களுக்கு என்ன கிடைக்கிறது? ரசிகர்கள் மகிழ்ச்சிக்காகத்தான் விளையாட்டைப் பார்க்க போகின்றனர். விளையாட்டு முடிந்தவுடன் ரசிகர்களுக்கு ரசித்ததினால் என்னப் பலன் என்று கேட்பது முட்டாள்தனம் அல்லவா? இதைப் புரிந்து கொண்டால், பக்தி சுகம் என்றால் என்ன? என்பதும் புரியும்.

பக்தி எதற்கு? பக்திதான் பக்திக்குப் பலன். அன்பு எதற்கு காண்பிக்கிறோம் என கேட்க முடியுமா? அன்பே மகிழ்ச்சி. அவ்வளவே!

ஏன் பாகவத பாராயணம் செய்ய வேண்டும்? ஏன் கிருஷ்ண கதை கேட்க வேண்டும்? எதற்கு ஸ்வாமிக்குத் திருமஞ்சனம்? எதற்கு ராதாக்ருஷ்ணருக்கு இப்படி அலங்காரம்? எதற்கு அர்ச்சனை?


க்ருஷ்ணனைப் பற்றிப் படிப்பதால், கேட்பதால், அவனை அலங்கரிப்பதால், ஆராதிப்பதால், புகழ்வதால், அவனை சொந்தம் கொண்டாடுவதால் உற்சாகம், மகிழ்ச்சி. இதற்கெல்லாம் வேறு எதிர்பார்ப்பு இல்லை. மகிழ்ச்சி வரும் என்ற எதிர்பார்ப்பு கூட இல்லை. செய்வதே மகிழ்ச்சியினால்தான். இதுவே பக்தி சுகம் - சுகந்தம்! நல்ல பாட்டை முணுமுணுக்கையிலோ, நல்ல உணவை சுவையாக சாப்பிடுகையிலோ, நல்ல சினிமா பார்க்கையிலோ, அட்டகாசமான உடைகளை அணிகையிலோ, யாராவது நான் மகிழ்ச்சிக்காகக் கேட்கிறேன், பார்க்கிறேன், சாப்பிடுகிறேன், அணிகிறேன் என சொல்கிறார்களா என்ன? வேறு நினைவு இல்லை. ஆனால், மகிழ்வு இருக்கிறது.

...தொடரும்

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Ltd**





Dr. Shriraam Mahadevan
MD (Int Med), DM (Endocrinology)
Consultant in Endocrinology and Diabetes, Regn No. 62256
ENDOCRINE AND SPECIALITY CLINIC
Sri Ganesh Flats, Flat no.4, Ground floor,
Old no.72, New No. 460, T.T.K. Road, Alwarpet,, Chennai 600018
Tel: 044-24350090 Mob: 9445880090
Email: mshriraam@gmail.com
www.chennaiendocrine.com


# வெளியீடுகள்




பாகவத தர்ம சாரம்
ஸ்ரீ ஸ்வாமிஜியின்
உபன்யாசங்களிலிருந்து...
புத்தகத்தின் விலை
Rs 100/-

A DIVINE PRESENT FOR THE PRESENT ERA
ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அருளிய
கலிதர்ம உந்தியாரின்
ஆங்கில புத்தகம், Rs 70/-







ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அருளிய கலிதர்ம உந்தியாரின், ஸ்ரீ பாக்யநாதன்ஜியின் 9 நாட்கள் சென்னையில் நடந்த தமிழ் சொற்பொழிவு - Audio, Video மற்றும் புத்தக வடிவில்,
Audio CD: Rs 100/-, DVD Rs 400/-

**கிடைக்கும் இடம்:**
**Madhuram Stores**
**4/11 Netaji Nagar Main Road,**
**Jafferkhanpet, Chennai - 83**
**Ph: 9442613710**





வெண்ணெய்த் தாழி உற்சவம்,
1 April, மன்னார்குடி



பிள்ளைப்பாக்கம் பெருமாள் கோவில் கும்பாபிஷேகம்,
17 April




**ஸ்ரீமத் ராமாயணம் உபந்யாசம், சீதாராமா ஹால்,**
**12-14 April, பெங்களூரு**





கல்கரே ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேய ஸ்வாமி ப்ரதிஷ்டா தினம் புறப்பாடு, 15 April, பெங்களூரு

பெரியகுளம் நாமத்வார் பூமி பூஜை, 30 Apr





கர்நாடக நாமத்வார் - முதலாம் ஆண்டுவிழா, 21 Apr

**வேத வ்யாஸ புராண பாடசாலா டிரஸ்ட் சார்பில், ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் அருளிச்செயலான கலிதர்ம உந்தியார் தொடர் உபந்யாசம், ஸ்ரீ பாக்யநாதன்ஜி, 16-21 April, பெங்களூரு**










ஸ்ரீ பூர்ணிமாஜியின் சத்சங்கங்கள்:
6-8 April ஸ்ரீ ராமானுஜர் வைபவம், செட்டார் நகர் மும்பை;
9-14 April, ஸ்ரீமத் ராமாயணம், காட்கோபர் சமாஜ், மும்பை







ஸ்ரீ முரளி அவர்களின் ஸ்ரீமத் ராமாயணம் உபந்யாசம்,
27 March - 5 April, சிதம்பரம் நாமத்வார்; 8-11 April, வெங்கட்டூர்





ஸ்ரீ கேசவன் அவர்களின் ஸ்ரீ ராமானுஜர் வைபவம் உபந்யாசம்,
24-31 March, கீர்த்தனாவளி மண்டபம், காஞ்சிபுரம்





ஸ்ரீ பம்மல் பாலாஜி அவர்களின் சத்சங்கங்கள் -
பொன்னேரி, ஸ்ரீபெரும்புதூர், திருநெல்வேலி



# GOD Annual Day -









# Bengaluru, 16 April 2017

ஸ்ரீ ராமஸ்வாமி அவர்களின் ஸ்ரீமத் பாகவதம் உபந்யாசம்: 27 March - 2 April, ராணிப்பேட்டை





குமாரி காயத்ரியின் ஸ்ரீமத் ராமாயணம் உபந்யாசம், 6-11 April பெங்களூரு

கன்யா சகோதரிகளின் பக்த விஜயம் உபந்யாசம், 1-3 April, மும்பை
ஸ்ரீமத் பாகவதம் உபந்யாசம், 14-20 April, நெய்வேலி





ஸ்ரீ சனத்குமாரின் ராம கதாம்ருத சாரம் உபந்யாசம், 3-5 April பெங்களூரு

# பாலகர்களுக்கு ஒரு கதை

மடாலயம் ஒன்றின் தலைமை குருவானவர் பிரசித்தியானவர். இதமாகப் பழகி, உயர்ந்த விஷயங்களை எளிமையான வழிகளில் எடுத்துச் சொல்லி அனைவரையும் உயர்த்தி வந்தார். அதனால், அவர் மீது அனைவருக்கும் ஒரு நல்ல மரியாதை இருந்தது.

ஒருநாள், அந்த மடாலயத்தின் வாசலில் ஒரு இளைஞன் வந்து நின்றான். வாட்ட சாட்டமாய் நல்ல உடல் வாகுவுடன் இருந்தான். அவனை அந்த தலைமை குரு வரவேற்று, உனக்கு என்ன வேண்டும்? எனக் கேட்டார். அவன் அவரை விழுந்து வணங்கி, "குருவே! என் பெயர் தாமோதரன். எனக்குத் தாங்கள் உங்கள் மடாலயத்தில் ஒரு வேலை தந்து தங்க இடம் அளித்து அருள வேண்டும்" என்றான்.

அந்தத் தலைமை குரு அவனைப் பார்த்து, "மகனே! எல்லோருக்கும் இங்கு இடம் தர முடியாது. தகுந்த தகுதிகளைப் பெற்றவருக்குத்தான் இவ்விடம்" என்றார். உடனே தாமோதரன், "எனக்கு அந்த தகுதிகள் இல்லையா?" என்று ஆவலுடன் கேட்டான்.

குருவானவர் அப்பொழுது அருகில் சென்று கொண்டிருந்த ஒரு வயதானச் சாதுவை அழைத்து, அருகில் அமரச் சொன்னார். அவரும், குரு சொன்னவுடன் அமர்ந்தார். குரு இப்பொழுது தாமோதரனிடம், 'உனக்கு என்னப்பா தெரியும்? என்ன வேலை எல்லாம் செய்வாய்?" என்று கேட்டார். தாமோதரன், "ஸ்வாமி! நான் ஆஸ்ரமத்தில் உள்ள அனைத்து இடங்களையும் பாத்திரங்களையும் துணிகளையும் சுத்தம் செய்வேன். தோட்ட வேலை பார்க்கலாம். மற்றும் தாங்கள் எந்தப் பணியை இட்டாலும் கற்றுக்கொண்டு செய்வேன்" என்றான். "உனக்கு என்ன வேண்டும்?" என்றார் குரு. "தனக்கு உணவும் உடையும் இருக்க இடமும் வேண்டும்" என்றான் தாமோதரன்.

குரு சற்று யோசித்தவாறே, "சரி! வேறு என்ன உனக்குத் தெரியும்?" என்றார். தாமோதரன் முகம் உடனே வாடியது. தான் வறுமை காரணமாக கல்விச்சாலையே சென்றதில்லை என்றும், அதனால் தான் ஒன்றும் அறியாதவன் என்றும் சொன்னான். குரு ஆனாலும் விட்டபாடில்லை. "ஏதாவது விளையாடத் தெரியுமா உனக்கு?" என்று கேட்டார். தாமோதரன், "சதுரங்கம் வேண்டுமானால் ஆடுவேன். தட்டாமாலை ஆடுவேன்" என்றான்.

குருவானவர் சிரித்துக் கொண்டே தன் அருகில் அமர்ந்திருந்த வயதான சாதுவைப் பார்த்து, "உங்களால் தட்டாமாலை ஆட முடியாது. இவனுடன் கொஞ்சம் சதுரங்கம் ஆடுங்கள்" எனச் சொல்லி சதுரங்க பலகைகளையும் காய்களையும் எடுத்து வரச் சொன்னார். ஆட்டம் ஆரம்பிக்கும் முன் தாமோதரனிடம் குருவானவர் "இதோ பார்! போட்டியில் வெல்பவருக்குத்தான் இங்கு இடம். தோற்றவர் வெளியில் போய் விட வேண்டும்" என்றார். தலை ஆட்டினான் தாமோதரன்.

போட்டி ஆரம்பமாகியது. முதலில் விளையாட்டாகவே ஆடினான் தாமோதரன். காய்களை நகர்த்தி ஆட ஆட ஆட்ட விறுவிறுப்பு அதிகமானது. அதில் தோற்றுவிட்டால் தனக்கு அங்கு வேலை கிடைக்காது என்று தாமோதரன் நினைக்க அவனது கவனம் அதிகமாகிக் கொண்டே போனது. சாது நிதானமாக ஆடினாலும், அவர் கவனம் ஆட்டத்தில் இருந்தது.

அதைப் பார்த்த தாமோதரன் தீவிரமானான். எப்படியும் போட்டியில் வெற்றி அடைய வேண்டும் என விட்டுக் கொடுக்காமல் மிகுந்த கவனத்துடன் ஆட ஆரம்பித்தான். அதனால் குறுகிய சமயத்திலேயே, ஆட்டம் அவனுக்குச் சாதகமாக மாறியது. அவன் வெற்றி பெற வாய்ப்பு கூடிக் கொண்டே போனது. அவன் தன் கவனத்தை சிதற விடவில்லை.

எதிரே இருந்த சாது முகத்தில் கொஞ்சம் கவலை அரும்பி மிகவும் யோசிக்கிறாற் போல் இருந்தது. ஆனாலும் அவர் முகத்தில் வெகுநாள் குருவுடன் இருந்தவரென்பதால் முகத்தில் காந்தியும் தெளிவும் இருந்தது தாமோதரனுக்குத் தெரிந்தது. அவர் வயதாகியிருந்தபடியால் உடலில் சுருக்கங்கள் விழுந்திருந்தன. சதைப்பற்று குறைந்திருந்தது. இருப்பினும் அவர் அணிந்திருந்த எளிய ஆடையும் கூட அவருக்கு ஒரு அணிகலன் போல தோற்றமளித்தது. அப்பொழுது குருவை திரும்பிப் பார்த்தான் தாமோதரன். அவர் கவனம் முழுக்க முழுக்க தன் மேலேயே இருப்பதைப் பார்த்து மீண்டும் ஆட்டத்துக்குள் தன் கவனம் முழுவதையும் அவன் கொண்டு வந்தான்.

திடீரென தாமோதரனுக்கு அப்பொழுது இருந்த பரபரப்பு குறைந்து விட்டது. தான் ஜெயிக்க வேண்டும் என்று அவன் ஆடினான் முதலில். இப்பொழுதோ, "நான் தோற்றால் என்ன? வெளியில் போக வேண்டும். எங்காவது வேலை செய்து பிழைத்துக் கொள்ளலாம். ஆனால், இந்த சாதுவோ மிக்க நல்லவராகத் தெரிகிறார். இவர் போன்றவருக்குத்தான் இந்த இடம். அவர் ஜெயித்தால் இங்கு இருக்கலாம். தோற்றால் இந்த வயதில் எங்கு செல்வார்? கஷ்டப்படுவார்" என்று நினைத்தான். அவன் மனம் கொஞ்சம் கனத்தது. தலை நிமிர்ந்து அந்த சாதுவைப் பார்த்தான். அவர் கவனமும் தன் மேலேயே இருக்க ஆச்சரியப்பட்டான். ஆனால், அந்த சாதுவை பார்த்தாலே அவன் மனதில் மேலும் மேலும் சாந்தி பரவியதை அவன் உணர்ந்தான்.

உடனே ஒரு முடிவுக்கு வந்தவனாய், வேண்டுமென்றே தவறாக ஆடினான். அதனால் ஒரே நொடியில் அந்த சாது ஜெயிப்பது மிக சுலபம் என்று அமைந்தது ஆட்டம். உடனே ஒரு வெடிச்சிரிப்பு சிரித்தவாறு, தலைமை குருவானவர் அந்த காய்களை எல்லாம் அடித்து கலைத்து விட்டு, தாமோதரனை இறுக அணைத்து "மகனே! உனக்கும் இடம் உண்டு. அவரும் இங்கேதான் இருப்பார். வாழ்க்கையில் கவனமும் அவசியம். கருணையும் தேவை. ஆட்டத்தில் ஆரம்பத்தில் மிக கவனமாக வெற்றி பெறுவதற்காக ஆடினாய். கவனம் மிக முக்கியம். பின்னர் சாதுவிற்கு என்ன ஆகுமோ என்று நினைத்து, கருணையுடன் விட்டுக் கொடுத்தாய். இவைதான் வாழ்க்கை எனும் கல்விச்சாலையில் ஒருவன் படிக்க வேண்டிய பாடங்கள். நீ தோற்றாலும் வென்றாய்" என்றார்.

தாமோதரன் குருவின் ஆசியால் மேலும் உயர்ந்த பாடங்களை கற்றான் எனச் சொல்லவும் வேண்டுமோ?

# மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை

**ஸ்ரீ விஷ்ணுப்ரியா**

'யம' என்றால் எமதர்மராஜன், காலன், ம்ருத்யு என்று எல்லோருக்கும் தெரியுமே! எதற்கு இத்தகைய அமங்களமான சொல்லைப்பற்றிப் பார்க்க வேண்டும்? என்று நினைக்கத் தோன்றும். 'யம' என்றால், ப்ரசித்தமாக எமனைக் குறிக்கும். ஆனால், 'யம' என்ற சொல்லிற்குப் பல கோணங்களில் அர்த்தம் உண்டு.

'யம' என்றால் இரண்டு, இரட்டை, ஜோடி என்று பொருள். இரட்டைப் பிறவிகளுக்கு 'யம', 'யமள' என்று பெயர். யமனுக்கே 'யம' என்ற பெயர் அதனால்தான் வந்தது. யமனும் அவனது தங்கை யமியும் இரட்டைப் பிறவிகள். அவர்கள் சூரியனின் குழந்தைகள். இந்த 'யமி' வேறு யாருமில்லை 'யமுனை' தான் அவள். யமனுடைய தங்கை என்பதால் 'யமானுஜா' என்று யமுனைக்கு ஒரு பெயர் உண்டு. சூரியனின் பெண் என்பதால், 'ஸூர்யஜா' என்றும் பெயர்.

'யமள' என்றால் இரட்டைப் பிறவிகள் என்பதால்தான் தாமோதர லீலையில் நளகூபர-மணிக்ரீவர்களை 'யமளார்ஜுன' என்கின்றோம். அவர்கள் இரட்டை அர்ஜுன மரங்களாக இருந்ததால் 'யமளார்ஜுன' என்று அழைக்கிறோம். அந்த இரட்டை அர்ஜுன வ்ருக்ஷங்களை முறித்ததால் 'யமளார்ஜுன பஞ்ஜன க்ருஷ்ணா க்ருஷ்ணா!' என்று பாடுகிறோம். 'ஜோடி' என்ற அர்த்தத்தில் பார்த்தால் யமள என்றால் யுகளம் என்றும் பொருள். மேலும் 'யமக' என்று ஒரு சொல் உண்டு. அதற்கும் 'இரட்டை' என்றுதான் அர்த்தம்.



‘எதுகை’, ‘மோனை’ என்று நாம் தமிழ் இலக்கியத்தில் கூறுவதுபோல், ஸம்ஸ்க்ருத இலக்கியத்தில் ‘யமக’ என்று சொல்வார்கள். இரட்டை இரட்டையாக சொற்கள் வைத்து அமைக்கப்பட்டால், அதற்கு ‘யமக’ என்று பெயர். ஒரு உதாரணத்திற்கு —

ஆனந்த ரூபே நிஜபாத ரூபே
ப்ரம்மஸ்வரூபே ஸ்ருதிமூர்த்தி ரூபே

என்று ஸ்ரீ சங்கரரின் ரங்கநாதாஷ்டகத்தில் வருகிறது. இதில் ரூபே என்ற பதம் மீண்டும் மீண்டும் வருவதைக் காண்கின்றோம். இதுதான் ‘யமக’. இதுபோல் பல உதாரணங்கள் உள்ளன.

‘யம’ என்ற சொல்லிற்கு முற்றிலும் வித்தியாசமாக வேறு ஒரு பொருளும் உள்ளது. ‘யம’ என்றால் ‘restraint’ அதாவது ‘ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பது’. அஷ்டாங்க யோகத்தில் முதல் படியாகக் கூறப்படுவதுதான் இந்த ‘யமம்’. அதன் பிறகு யம, நியம, ஆசன, ப்ராணாயாம, என்றெல்லாம் அந்தப் படிகளைக் கூறுகின்றோம். ‘யம’ என்பது யோக சாஸ்திரத்தில், ஐந்தாகக் கூறப்படுகிறது. அவை அஹிம்சை, சத்யம், அஸ்தேயம் (திருடாமல் இருப்பது), ப்ரும்மசர்யம், அபரிக்ரஹம் (எந்தப் பொருளையும் யாரிடமிருந்தும் பெற்றுக் கொள்ளாமல் இருப்பது) என்பவை. ‘ஸம்யமம்’ என்றாலும் நன்கு அடக்குதல், நல்லொழுக்கம் என்றுதான் பொருள். ஸம்யமத்தைக் கடைப்பிடிப்பவருக்கு ‘ஸம்யமீ’ அல்லது ஸன்யாசி, துறவி என்று பெயர். எல்லா ஆசைகளையும் நன்கு அடக்கியவன் என்று பொருள்.

இவ்வாறு பல கோணங்களில் ‘யம’ என்ற சொல்லிற்குப் பலவிதமான அர்த்தங்கள் இருப்பதைப் பார்த்தோம்.

### ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் பொன்மொழிகள்

இப்போதெல்லாம் மழையே பெய்வதில்லை. மழை பெய்யவேண்டும் என்று எல்லோரும் பிரார்த்தனை செய்கிறார்கள். மழை ஏன்? இல்லை என்று கேட்டால், மக்கள் தர்மத்தின் படி வாழவில்லை, அதனால் மழை பெய்யவில்லை என்று சொல்லப்படுகிறது. அப்படியென்றால், மழை வேண்டும் என்று மட்டும் பிரார்த்தனை செய்வதைவிட, தர்மத்தோடு எல்லோரும் வாழ்வதற்கும், மழை பெய்வதற்கும் என்று சேர்த்துப் பிரார்த்தனை செய்தால் சரியாக இருக்கும். தர்மத்தின்படி வாழ்வது என்றால், எந்த தர்மத்தின்படி? என்று கேள்வி வருகிறது. இந்தக் காலத்திற்கு ஏற்றது பாகவத தர்மம். எல்லோரும் பாகவத தர்மத்தோடு வாழவேண்டும் என்று பிரார்த்தனை செய்வது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

"நான் ஒருபோதும் தோல்வியடையமாட்டேன் - ஒன்று வென்றுவிடுவேன் அல்லது கற்றுக்கொள்வேன்''

இச்செய்தியை ஒரு சமயம் எனது நண்பர் ஒருவர் அனுப்பியிருந்தார். நாம் நண்பர்களோடோ அல்லது தனியாகவோ விளையாடும்போது, நாம் வெற்றியடைந்தாலும் தோற்றாலும் நமக்கு நாமே சிரித்துக்கொண்டு, அடுத்த முயற்சியில் வெற்றி பெறுவதற்காகத் திட்டமிடத் துவங்குவோம்.

விளையாட்டுகளில் ஏற்படும் தோல்விகளுக்காக நாம் அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. ஆனால், வேலை என்று வரும்போது நமது இந்த நிலைப்பாடு நமக்கே மறந்துவிடுவது மிகவும் விந்தையாகும். விளையாட்டில் கடைப்பிடிக்கும் அதே மனநிலையை வாழ்க்கையிலும், வேலையிலும் கடைப்பிடித்தல் சாலச் சிறந்ததாகும். அது நன்கு வேலை செய்யும். வெற்றி தோல்விகளினால் ஏற்படும் பயமோ, பேராசையோ அல்லது பொறாமையோ நமது வாழ்வைச் செலுத்துமானால் பிறகு மகிழ்ச்சியைத் தொலைக்க நேரிடும். ஆனால், நமது மனநிலையைச் செலுத்தும் காரணியாக நேர்முகச் சிந்தனைகள் அமையுமெனில், நமது வாழ்வே எப்போதும் மகிழ்ச்சி கொப்பளிக்கும் விளையாட்டாக மாறிவிடும் என்பதில் ஐயப்பாடுகளுக்கு இடமே இல்லை.

ஆக, நாம் ஒருபோதும் தோல்வியடைவதில்லை, மாறாக வெற்றியடைவோம் அல்லது கற்றுக்கொள்வோம்..

எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பதன் மூலம் உலகெங்கிலும் மகிழ்ச்சியைப் பரப்புவோமாக...



# உள்முக மாற்றமும் வளர்ச்சியும்

ஸ்ரீ ராமானுஜம்ஜி

# சனாதன புதிர் 96

## ஆத்ரேயன்

1. வித்யா மண்டல ரிஷி என்பவர் யார்?
2. க்ருத யுகம் முதல் இன்று வரை உலகத்திற்கு ஹிதத்தை செய்து வருபவர் யார்?
3. அஸ்விநெள என்பது யாரைக் குறிக்கிறது?
4. ஹரிதஸ்வ: என்ற சொல் மூலம் யார் அறியப்படுகின்றார்?
5. த்வாதஸாத்மந் என்ற பதத்தில் குறிப்பிடப்படும் 12 மூர்த்திகள் யார்?
6. ஸாரங்கன் என்ற பெயருக்கு என்ன அர்த்தம்?
7. எத்தனை நக்ஷத்திரங்கள், எத்தனை யோகங்கள், எத்தனை கரணங்கள் உள்ளன?
8. அகிலாண்டேஸ்வரி திருவானைக்காவல் வந்து ஜலத்தை லிங்கமாக பூஜித்தாள். இது எந்த புராணத்தில் காணப்படுகிறது?
9. ஆதிசங்கரர் ப்ரச்நோத்ர ரத்னமாலிகாவில் அந்த பகவான் யார் என்ற கேள்விக்கு என்ன சொல்லுகிறார்?
10. சூர்யபகவானால் செய்யப்பட்ட சுதர்ஸன ஸ்தோத்திரம் எந்த புராணத்தில் காணப்படுகிறது?

## பதில்கள்

1. அகஸ்திய மகரிஷி
2. அகஸ்திய மகரிஷி
3. ஸூர்ய பகவானைக் குறிக்கிறது. வெண் குதிரை ரூபமான ஸம்ஜ்ஞா தேவியினிடத்தில் ஆண் குதிரை ரூபமான ஸூர்யனுக்கு பிறந்த பிள்ளைகள் அச்விநீ தேவதைகள் - இவர்கள் தேவ வைத்தியர்கள்.
4. ஹரித: ச்யாமா: அஸ்வா: அஸ்ய சந்தி இதி ஹரிதஸ்வ: - பச்சை நிறமுள்ள குதிரைகளோடு கூடிய ரதத்தில் ஸஞ்சரிப்பவராகிய சூரிய பகவான்.
5. "இந்த்ரோ தாதா பக: பூஷா மித்ரோத வருணோர்யமா, அர்ச்சிர் விவஸ்வாந் த்வஷ்டா சசி ஸவிதா விஷ்ணு ரேர ச" என்ற விஷ்ணு புராணப்படி இந்திரன், தாதா, பகன், பூஷா, மித்ரன், வருணன், அர்யமா, அர்ச்சி, விவஸ்வான், த்வஷ்டா, ஸவிதா, விஷ்ணு இவர்கள் 12 மூர்த்திகள்.
6. அரை நிமிடத்தில் 2000 யோஜனை தூரம் ஸஞ்சரிக்கின்ற ஸூர்யன், ஹம்ஸ பக்ஷியாக அவதாரம் செய்த மஹாவிஷ்ணு.
7. நக்ஷத்திரங்கள் 27, யோகங்கள் 27, கரணங்கள் 11
8. பாத்ம புராணம் - கஜாரண்ய மஹாத்மியம். எட்டாவது அத்தியாயம்.
9. சங்கரனாகவும், நாராயணனாகவும் இருக்கும் ஒரே பகவான் மஹேசன் (ஸ்லோகம்-65)
10. பவிஷ்யோத்தர புராணம் - கும்பகோண மாஹாத்மியம்

பாரம்பரிய பொக்கிஷங்கள்

# ரிக் வேதத்திலிருந்து π(Pi)யின் மதிப்பு 32 தசம பின்னம் வரை

- பாலாஜி ராமச்சந்திரன்

வேதத்தில் சொல்லப்படாத விஷயங்களோ அல்லது அறிவோ இல்லவே இல்லை என்று, அக்காலப் பழைய தலைமுறையினர் சொல்ல நாம் கேட்டிருப்போம்! அந்த வாதத்தைக் கேட்கும் எல்லோரும், இது ஒரு மிகைப்படுத்தப்பட்ட அதீத நம்பிக்கை கொண்ட ஒரு வாதம் என்று கூறுவதுண்டு. இப்படி கூறும் நம்மில் பலர், அக்கால இந்திய ஓலைச்சுவடிகள்/கையெழுத்துப் பிரதிகளில் உள்ள ஸ்லோகங்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட பொருள் தரும் வகையில் அமையப் பெற்றவை என்பதினை மறக்கக் கூடாது.

ரிக் வேதத்து ஸ்துதிகளில், π(Pi)யின் மதிப்பானது 32தசம பின்னம்வரை குறிப்பிடப்பட்டுள்ளது! மேற்கத்திய கணிதமேதைகள், கணிப்பொறி கண்டுபிடிக்கும்வரை π(Pi)யின் மதிப்பை 16 தசம பின்னம் வரை மட்டுமே மிகச்சரியாக தெரிந்து வைத்திருந்தனர். கணிப்பொறியின் துணையுடன் கூட, மிகச்சிறந்த கணிப்பொறி வல்லுனர்கள் π(Pi)யின் மதிப்பை 28தசம பின்னம்வரை கணக்கிடுதல் என்பது மிகவும் சவாலான காரியமே!

சமஸ்க்ருதத்தில், பின்வரும் வேத எண்ணியல் குறியீடு பல ஸ்லோகங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

कादि नव<br>
टादि नव<br>
पादि पञ्चक<br>
यद्यश्टक<br>
क्ष शुन्यम्

**காதி நவ**<br>
**டாதி நவ**<br>
**பாதி பஞ்சக**<br>
**யத்யஷ்டக**<br>
**க்ஷஸ¬ன்யம்**

**விளக்கம்**

**காதி நவ - ‘க’ வில் தொடங்கி, 9ன் தொடர் வரிசை**
**ஒவ்வொரு எழுத்தும் 1,2,3....9ஐ குறிக்கும்**
क - 1 ख - 2 ग - 3 घ - 4 ङ - 5 च - 6 छ - 7 ज - 8 झ - 9
**அதேபோல், டாதி நவ, ‘ட’வில் தொடங்கி**
ट - 1 ठ - 2 ड - 3 ढ - 4 ण - 5 त - 6 थ - 7 द - 8 ध - 9
**பாதி பஞ்சக (1-5), ‘ப’வில் தொடங்கி**
प - 1 फ - 2 ब - 3 भ - 4 म - 5
**யத்யஷ்டக (1-8), ‘ய’ வில் தொடங்கி**
य - 1 र - 2 ल - 3 व - 4 श - 5 ष - 6 स - 7 ह - 8
**க்ஷ - 0 வை குறிக்கும்**
क्ष - 0

**மேல் கொடுக்கப்பட்டுள்ள எண்ணியல் துணைகொண்டு சமஸ்க்ருதத்தில் பல கணித ஸ்லோகங்கள் உள்ளன. கீழே π(Pi) யினுடைய மதிப்பை சொல்லும் ஸ்லோகம் கொடுக்கப்பட்டுள்ளது.**

गोपीभाग्य मधुव्रातः श्रुंगशोदधि संधिगः |
खलजीवितखाताव गलहाला रसंधरः ||

**கோபீபாக்ய மதுவ்ராத: ச்ருங்கஷோததி ஸம்திக:|**
**கலஜீவிதகாதாவ கலஹாலா ரஸம்தர:||**

ग - 3 प - 1 भ - 4 य - 1 म - 5 ध - 9 र - 2 त - 6 श - 5
ग - 3 श - 5 द - 8 ध - 9 स - 7 ध - 9 ग - 3
ख - 2 ल - 3 ज - 8 व - 4 त - 6 ख - 2 त - 6 व - 4 ग - 3
ल - 3 ह - 8 ल - 3 र - 2 स - 7 ध - 9 र - 2
**3.14159265358979323846264338327 92..**

**மேற்கூறிய ஸ்லோகம் சிவனையும், விஷ்ணுவையும், Piனுடைய மதிப்பையும் குறிப்பதாக அமையப் பெற்றுள்ளது வியத்தகு வகையில் அமைந்துள்ளது அல்லவா?**

**அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் சம்பந்தமான பல அறிய ஸ்லோகங்கள் பொதிந்துக் கிடக்கின்றன. நாம்தான் அதனை தேடி கண்டு பயனடைய வேண்டும்.**

**- Mar 28 2016, SANSKRITI**

# சைதன்ய மஹாப்ரபு -8 குழந்தை நிமாயியின் பால லீலை - நிமாயியும் ஸ்ரீமத் பாகவதமும்




நிமாயி ஸ்ரீமத் பாகவதத்தை தன் தந்தையிடம் கொடுத்தான். ஜகன்நாத மிஸ்ரர் பாராயணம் முடிந்தவுடன் ஸ்ரீமத் பாகவதத்தை அடுத்த அறையில் வைக்கச் சென்றார். அப்பொழுது அவர் தெய்வீகமான ஒன்றைப் பார்த்தார்




இந்தத் தெய்வீகமான பாத சுவட்டை பார்த்ததும், ஜகன்நாத மிஸ்ரருக்கு ஸ்ரீமத் பாகவதத்தில் படித்த ராஸ லீலை சம்பவம் நினைவிற்கு வந்தது. அச்சம்பவத்தில், பகவான் கிருஷ்ணர் திடீர் என்று மறைந்த பொழுதில், சோகம் அடைந்த கோபியர்கள், துளசி தேவியை சரண் அடைந்தார்கள். அவர்களுக்குத் துளசி தேவி திவ்ய அடையாளங்கள் உடைய (சங்கு, சக்கரம், கதை, பத்மம்) கிருஷ்ணரின் பாத சுவட்டைக் காண்பித்தார்.






இச்சம்பவம் போன்று பல சம்பவத்தில் நிமாயி, தான் ஒரு அவதார புருஷன் என்பதை உலகத்திற்குக் காண்பித்து கொண்டே வளர்ந்தார்...

நிமாயியின் பால லீலைகள் தொடரும்...

# படித்ததில்  பிடித்தது

## A bank where Ram Naam is deposited in Urdu, Arabic

Apr 05, 2017
Times of India

**மூட்டை மூட்டைகளாக நோட்டுப் புத்தகங்கள் ஒரு வங்கியில் சேமிக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நோட்டிலும், ஸ்ரீ சீதா ராம் என்று ஆயிரக் கணக்கில் எழுதப்பட்டுள்ளது. ஹிந்தி, ஸம்ஸ்க்ருதம் மட்டுமல்லாது உருது மற்றும் அராபிய மொழியிலும் கூட நாமம் எழுதிய நோட்டுப் புத்தகங்கள் இவ்வங்கியில் உள்ளன. உலகமயமாக்கப்பட்ட இந்த நாம வங்கி அயோத்தியின் மணிராம் கீ சாவனி என்ற இடத்தில் உள்ளது. வட்டி எதுவும் கிடையாது. ஆனால், உயிர் விடும் தருவாயில், ஒருவர் செலுத்திய அத்தனை நாமங்களும் திருப்பித் தரப்படும் என்ற வாக்குறுதியோடு செயல்படுகிறது.**

**சுமார், 20 வருடங்களுக்கு முன்னர் தொடங்கப்பட்ட இந்த வங்கியில், சீதாராம் என்று சிவப்பு மையினால் எழுதப்பட்டு நிரப்பப்பட்ட நோட்டுக்களை மக்கள் சேமிக்க ஆரம்பித்தனர். எழுதுவதற்கான நோட்டுக்களை வங்கி இலவசமாகவே தருகிறது. இதுவரை பல கோடிக் கணக்கிலான நோட்டுக்கள் சேர்ந்திருப்பதாக வங்கியின் தரப்பிலிருந்து கூறுகிறார்கள். நாமம் எழுதுவதற்காக நோட்டுக்களை ஒருவர் வங்கியிலிருந்து வாங்கிச் சென்ற பின்னர், சில மாதங்களோ அல்லது வருடங்களோ கால அவகாசம் எடுத்துக்கொண்டு, எழுதி முடித்த பின் திருப்பித் தரலாம். உலகின் அல்லது உள்நாட்டின் வெவ்வேறுப் பகுதிகளிலிருந்தும் தபால் மூலமாக நோட்டுக்களைப் பெறும் வசதி உள்ளது.**

**ரசிக் நிவாஸ் கோவிலைச் சேர்ந்த மஹாந்த் ரகுவர சரண் என்பவர், ‘‘இந்த வங்கி பணத்தை முதலீடாகக் கொள்ளவில்லை. எனினும், இதன் வாடிக்கையாளர்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறார்கள்’’ என்கிறார். ‘‘சீதாராம் என்று எழுதுவது இறைவனை நினைப்பதற்கு உகந்த சிறந்த வழியாகும். அலுவலக நேரத்திலும் கூட கிடைக்கும் சிறு நேர இடைவெளியில் சுலபமாக எழுதிவிடமுடியும். பணிக்குச் செல்லாமல் வீட்டிலிருக்கும் பெண்களும் வீட்டு வேலைகளுக்கிடையில் கிடைக்கும் நேரத்தில் சுலபமாக எழுதலாம்’’, என்கிறார் நிர்மோஹி அகாராவின் தலைமை நிர்வாகி. ‘‘உருது, அராபிய மொழி, ஆங்கிலம், குஜராத்தி, மராத்தி என்று பல்வேறு மொழிகளிலும் சீதாராம் என்று எழுதப்பட்ட நோட்டுக்கள் இங்கு முதலீடு செய்யப்படுகின்றன. வாழ்க்கையின் ஒவ்வொரு அடியிலும் கண்ணுக்குத் தெரியாமல் பல துன்பங்கள் நிறைந்துள்ளன. அமைதியை தேடித்தரும் சுலபமான வழியை மக்கள் எதிர்நோக்குகின்றனர். சீதாராம் என்று எழுதுவது மிகச் சரியான மற்றும் சுலபமான முறையாகும்’’ என்றார்.**

| சத்சங்க நிகழ்ச்சிகள் | |
|---|---|
| 22 May 2017 | ஏகாதசி |
| 05 June 2017 | ஏகாதசி |

## அறிவிப்பு

**அனைத்து வாசகர்களும், தங்களது தொலைபேசி எண்ணை, தங்களது சந்தா எண்ணுடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

Email:
helpdesk@madhuramurali.org
Ph: "24895875"
SMS '9790707830'

## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு தெரிவிக்க வேண்டிய விஷயங்களை அனுப்பவேண்டிய முகவரி

Dr.A.BHAGYANATHAN,
Personal Secretary to
HIS HOLINESS
SRI SRI MURALIDHARA SWAMIJI
Plot No11, Door No 4/11,
Netaji Nagar Main Road,
Jafferkhanpet, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email :
contact@namadwaar.org

மதுரமுரளி


- Publisher : S. Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
- Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
- Advertisements in Madhuramurali are invited.



விஷு கனி, பெங்களூரு, 14 April 2017

Registered with The Registrar of Newspapers for India
R.No 62828/95
Regd. No. TN/CC(S)DN/119/15-17

Date of Publication: 1st of every month
Date of Posting: 5th and 6th of every month
Licensed to post without prepayment
WPP No. TN/PMG(CCR)WPP—608/15-17



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No2, Old No 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai – 83 and Printed by Mr R. Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A. Sivakasi Co-op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar